

துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 4,80,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்கள் இறகு பந்து போட்டிகளை, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. கரூர் ஆபிஸர்ஸ் கிளப் உள் விளையாட்டு அரங்கில் துவக்கிவைத்தார்.




அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவாக்குடி நகராட்சி செடிமலை முருகன் கோயில் பகுதியில் தனது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு (2024–2025) நிதி ரூ.16.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட அங்கன்வாடி மையத்தை குழந்தைகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் துவாக்குடி நகர் மன்றத் தலைவர் காயாம்பு நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### ஆத்தூர் தொகுதியில் விடுபட்டுள்ள

# 9 ஆயிரம் பேருக்கு இரண்டு தினங்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், டிச. 15- ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத் தொகை விடுபட்டவர்களில் 9 ஆயிரம் பேருக்கு இரண்டு தினங்களில் மகளிர்; உரிமைத் தொகை கிடைக்கும் என்று சீவல்சரகு ஊராட்சி ஜெ.புதுக்கோட்டையில் நடைபெற்ற என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.,

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சீவல்சரகு ஊராட்சிக்குட்பட்ட ஜெ.புதுக்கோட்டையில் கெண்டிச்சம்பட்டி, அஞ்சுகம் காலனி, அம்பேத்கர் காலனி, கைத்தறி நெசவாளர் காலனி, ஜெ.புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கான வாக்குசாவடி முகவர்களான பி.எல்.ஏ.2, பி.எல்.சி, பி.எல்.டி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கான என் வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலைகுனியவிடமாட்டோம் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆத்தூர் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஆத்தூர் தொகுதி திமுக தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் வாக்குசாவடி முகவர்கள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் மத்தியில் பேசும்போது வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்று நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார். காரணம் இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத நலத்திட்டங்களை தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி சாதனை படைத்துள்ளார். குறிப்பாக பெண்ணினத்தை முன்னேற்றும் வகையில் அவர் செயல்படுத்திய கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி பயிலும் பெண்களுக்கு உதவித் தொகை, மாணவர்களுக்கு உதவித் தொகை போன்ற நலத்திட்டங்களால் தமிழகத்தில் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

ஆத்தூர் தொகுதியில் குறிப்பாக கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 1,400 மாணவர்களுக்கும் மாதந்தோறும் உதவித் தொகை கிடைத்து வருகிறது. ஆத்தூர் தொகுதியில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப்பெறாதவர்கள் 10 ஆயிரம் பேர் மனுத்தாக்கல் செய்துள்ளனர். அவர்களில் 9 ஆயிரம் பேருக்கு வருகின்ற 12ம் தேதி முதல் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப் போகிறது என்று சொன்னவுடன் அங்கு கூடியிருந்த பெண்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆராவாரம் செய்தனர்.

இதுதவிர இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குடி தண்ணீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்கு வசதிகள் கேட்டுள்ளார்கள். ஒரு வார காலத்தில் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப் படும் என்றார்.

கூட்டத்தில் ஒன்றிய திமுக துணை செயலாளர்கள் கலா பச்சை, கருத்த ராஜா, முன்னாகள் ஒன்றிய பெருந்தலைவர் கலைச்செல்வி முருகன், மாவட்ட பிரதிநிதி செம்பட்டி கிட்டு, திமுக நிர்வாகி அம்பை ரவி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் வசந்தகுமார், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், திமுக நிர்வாகிகள் கொண்டப்பன் (எ) ஜோதி, விஜி (எ) விþஜயகுமார், கிளைக் கழக செயலாளர்கள் வரதராஜன், சக்திவேல், முருகன், சிவக்குமார், நாகராஜ் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மத்திய மாவட்டத்தில்

# துணை முதல்வர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!



நெல்லை.டிச.14 நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் கங்கைகொண்டானில் (07-12-2025 ) அன்று நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.

தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,கழக சட்டத்துறை இணை செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினர்.

நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் கங்கைகொண்டானில் (7ம் தேதி) அன்று நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தலைமையில் முத்தையா, மாயாண்டி,லயன் மந்திரம் பிள்ளை, பரமசிவம், செல்லப்பா, சுடலை முத்து, சித்திரைவேல், இசக்கி முத்து,பீர் மணி, அண்ணாதுரை, ராசையா, செல்வி ராமசாமி, மந்திரம், அடைக்கலம்,இசக்கி பாண்டி, இசக்கி பெருமாள், அருணாசலம், குழந்தை, ராஜபதி கனகராஜ், சங்கரன், சங்கரன், கணேசன், சண்முகவேல், மாடசாமி குட்டி, கோபால் ஆசாரி, ஆறுமுகம், உத்திரவாசகம், அப்பு என்ற ஆறுமுகம், கேபிள் வெள்ளத்துரை, பெரியசாமி, இசக்கி, நேதாஜி நகர் இசக்கி, காட்டுராஜா, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் ஆ.க.மணி, மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

நிகழ்ச்சியை மத்திய மாவட்ட இலக்கிய அணி சின்னத்துரை,கழகப் பேச்சாளர்கள் நெல்லை முத்தையா,நெல்லை ரவி,சி.பா ராவணன்,நெல்லை மணி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று பேசியதாவது:-

இந்த பூமியான கங்கை கொண்டான் திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் இடம் பிடித்த ஊர்.கருப்பையா என்பவரை இருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த ஊர் இந்த ஊர். இதனை உணர்த்தும் அளவிற்கு இந்த மண்ணிலே அதிகம் பேர் பணியாற்றி உள்ளார்கள். இன்று அந்தக் குடும்பத்தினர் தொடர்ந்து கழகத்திற்காக உழைத்து வருகின்றனர்.

இது குடும்பக் கட்சி தான், குடும்ப அரசியல் தான், அதனால் இந்த இயக்கம் எஃகு கோட்டையாக உள்ளது.

இதனைக் கூற காரணம் தலைமுறை தலைமுறையாகச் சிறை சென்ற குடும்பம் மற்றும் ஒரே கொடியைப் பிடித்த குடும்பம் தங்களுடையது என பெருமிதத்துடன் கூறுகிறேன். ஒரே கொடியைப் பிடிப்பது நாங்கள் தான். பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், “திமுக ஆட்சி என்ன செய்த்து என பேட்டியில் கூறுகிறார்.ஒருவாரத்திற்கு முன்பு அவர்தான் கூறினார்.முதல்வர் அவர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தந்தார் என பாராட்டிய நயினார்,கட்சி மாறியதும் பேச்சையும் மாற்றிவிட்டார். இதனை மக்கள் நம்புவார்களா?

தமிழகம் அயோத்தியாக மாறும்” என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார். அதை ஒப்புக்கொள்கிறேன் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அயோத்தி தொகுதியிலேயே பா.ஜ.க தோல்வியடைந்தது போல, தமிழகத்திலும் பா.ஜ.க.கூட்டணி தோல்வியடையும் என்பதையே நயினார்நாகேந்திரன் ஒப்புக்கொண்டுள்ளார்.

தமிழகத்தை யார் அயோத்தியாக மாற்ற நினைத்தாலும் தமிழக மக்கள் அவர்களுக்கு பாடம் புகட்டுவார்கள்.எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில்,பாராட்டும் வகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் திருநெல்வேலி தொகுதி கைநழுவி போய்விட்டது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அத்தொகுதியில் தி.மு.க 19,000 வாக்குகள் அதிகம் பெற்று முன்னிலை பெற்றது. . வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க வேட்பாளர் யாராக இருந்தாலும் பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டத்தில் கழக சட்டத்துறை இணை செயலாளர் சூரியா வெற்றிகொண்டான், கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன் கான்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலை ராஜா மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் (மேற்கு) தினேஷ், (கிழக்கு) மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜூ, மாவட்ட துணை செயலாளர் தர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாநகர துணைச் செயலாளர் மூளிகுளம் பிரபு,ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன், அன்பழகன், வேலங்குளம் கண்ணன்,மாவட்ட மருத்துவ அணி ரவி,பகுதி பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம், டாக்டர். சங்கர்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், எல்.ஐ.சி பேச்சிமுத்து, கவிஞர் மூர்த்தி,மில் ஜே.குமார் உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA-2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் எஸ்.ஏ. பிரபா அருள்மணி, சமூக வலைத்தளம் களப்பணியாளர் கீர்த்தி ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

### ஆயுர்வேதம், சித்தா

# மருந்து உற்பத்தியாளர்களின் சிக்கல்கள் தீர்க்கப்படுமா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 15– தென்சென்னை தொகுதி தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், ஆயுர்வேதம், சித்தம், யுனானி உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ மருந்துகளின் தரம், ஆய்வக வசதி மற்றும் சிறு உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் முக்கியமான கேள்விகளை எழுப்பினார்.

தமிழ்நாட்டில் ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் எதிர்கொள்ளும் ஒழுங்குமுறை இணக்கச் சிக்கல்கள் குறித்து ஒன்றிய அரசு சமீபத்தில் ஏதேனும் மதிப்பாய்வு மேற்கொண்டுள்ளதா என்றும், மாநில மருந்து பரிசோதனை ஆய்வகங்கள் மற்றும் அரசு ஆய்வாளர்களின் திறன் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார். மேலும், மருந்து சோதனையை வலுப்படுத்துதல், நிலுவையில் உள்ள பரிசோதனைகளை குறைத்தல், ஆய்வக உட்கட்டமைப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்றும், லேபிளிங், பேக்கேஜிங் மற்றும் ஆவணப்படுத்தலில் சிரமம் எதிர்கொள்ளும் சிறிய உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்காக எளிமைப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல் அல்லது படிப்படியான இணக்க ஆதரவை வழங்க அரசு முன்வந்துள்ளதா என்றும் அவர் விளக்கம் கேட்டார். இதனுடன், இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டின் மாநில உரிமம் வழங்கும் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் விவரங்களையும் அவர் கோரினார்.

இதற்கு பதிலளித்து ஒன்றிய ஆயுஷ் துறை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். அது வருமாறு:–

மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் மருந்துகள் விதிகள், 1945 ஆகியவற்றின் கீழ், ஆயுர்வேதம், சித்தா, சவுரிக்பா, யுனானி மற்றும் ஓமியோபதி மருந்துகளின் தரக் கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்குதல் தொடர்பான சட்ட விதிகளை அமல்படுத்துவது, ஒன்றிய–மாநில அரசுகள் நியமித்துள்ள மாநில மருந்து கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் மாநில உரிமம் வழங்கும் அதிகாரிகளின் பொறுப்பாக இருப்ப தாக தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், மாநில மருந்து ஆய்வாளர்கள் (இந்திய மருத்துவம்) மூலப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் தரம், பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறை தரங்களுடன் இறுதி தயாரிப்புகளின் இணக்கம், நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) ஆகியவற்றை உறுதி செய்ய உற்பத்தி வளாகங்களில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், தமிழ்நாட்டில் ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி மற்றும் ஓமியோபதி மருந்துகளின் பரிசோதனையை எளிதாக்கு வதற்காக ஒரு மாநில மருந்து பரிசோதனை ஆய்வகம் (இந்திய மருத்துவம்) மற்றும் ஒரு அரசு ஆய்வாளர் தற்போது செயல்பட்டு வருவதாகவும், ஒன்றிய அரசின் திட்டமான ‘ஆயுஷ் குன்வத்த ஏவம் உத்பதன் சம்வர்தன் யோஜனா’ திட்டத்தின் கீழ் அந்த ஆய்வகத்தை வலுப்படுத்த ரூ.1.12 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூலப்பொருட்கள் மற்றும் மருந்துகளை பரிசோதிப்பதற்காக, மருந்துகள் விதிகள், 1945ன் விதி 160 (E)ன் கீழ் தமிழ்நாட்டில் 14 தனியார் மருந்து பரிசோதனை ஆய்வகங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாநில மருந்து பரிசோதனை ஆய்வகத்தால் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளின் விவரங்கள் இணைப் பாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஆயுர்வேதம், சித்தா, சவுரிக்பா மற்றும் யுனானி மருந்துகளுக்கான லேபிளிங் மற்றும் பேக்கேஜிங் விதிகள் மருந்துகள் விதிகள், 1945ன் விதி 161ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஏற்றுமதிக்கான மருந்துகளுக்கு விதி 161 (A)ன் கீழ் விலக்குகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் விளக்கினார். இதேபோல், நல்ல உற்பத்தி நடைமுறைகள் தொடர்பான விதிகள் மருந்துகள் விதிகளின் அட்டவணை ‘T’யில் குறிப்பிடப் பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதிக்கான மருந்தியல் ஆணையம் (PCIM&H), ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் துணை அலுவலகமாக செயல்பட்டு வருவதாகவும், மருந்து ஒழுங்குமுறை அதிகாரிகள், தரக் கட்டுப்பாட்டு பணியாளர்கள் மற்றும் மருந்து உற்பத்தியாளர்களுக்காக காலாண்டு அடிப்படையில் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். கடந்த மூன்று நிதியாண்டு களில் மொத்தம் 11 திறன் மேம்பாட்டு பயிற்சி (CBT) திட்டங்கள் நடத்தப்பட்டு, இதில் சித்த மருத்துவத்தைச் சேர்ந்த 7 பேர் உட்பட 207 பேர் பங்கேற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ASSU மருந்துகள் தொடர்பான பல்வேறு விவகாரங்களில், ஆயுஷ் அமைச்சகம் தமிழ்நாடு அரசு உள்ளிட்ட மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாகவும், மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940ன் பிரிவு 33 (D)ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருந்துகள் ஆலோசனைக் குழுவில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் பிரதிநிதிகள் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் விளக்கினார். இந்த குழு, நாடு முழுவதும் சட்டத்தின் சீரான அமலாக்கத்தை உறுதி செய்ய மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்.

மக்களவையில் எழுந்த இந்த கேள்விகள், பாரம்பரிய மருத்துவ மருந்துத் துறையில் தரம், ஒழுங்குமுறை எளிமை மற்றும் சிறு உற்பத்தியாளர்களின் சிக்கல்கள் குறித்து தேசிய அளவில் மீண்டும் கவனம் ஈர்த்துள்ளதாக குறிப்பிடத் தக்கது.




நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமையில் ஆணையாளர் மரு.மோனிகா ராணா,துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.



திசையன்விளை இராமேஸ்வரம் செல்லும் அரசு பேருந்து புதிய வழித்தடமாக விளாத்திகுளம் வட்டம் பெரியசாமிபுரம், பச்சையாபுரம்,குஞ்செயபுரம் புதிய வழித்தடத்தில் பேருந்து செல்வதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.நிகழ்வில் தூத்துக்குடி மண்டல பொது மேலாளர் ராமகிருஷ்ணன், விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, இம்மானுவேல், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பெப்பின்காகு, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.